

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 284 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 12 – செவ்வாய்க்கிழமை 26 மே 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 284 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 12 - Tuesday 26 May 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### சென்னை – புறநகரில் ‘ரீல்ஸ்’ த.வெ.க. ஆட்சியில்

# கடும் மின்வெட்டு! பொதுமக்கள் சாலை மறியல்!

## மருத்துவமனைகளில் நோயாளிகள் அவதி! அலட்சியத்தில் அமைச்சர்!

சென்னை, மே 26 -

தமிழக வெற்றி கழகம் ஆட்சிக்கு வந்து 15 நாட்கள் ஆகும் நிலையில், தொடர்ந்து சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டு பிரச்சினை தொடர்கதையாக உள்ளன. ஒரு சில இடத்தில் 4 முதல் 6 மணி நேரம் வரையும், சில இடத்தில் தினமும் 10 முறையும் மின் தடை ஏற்படுகிறது. இதனையும் தாண்டி சில இடங்களில் ஒரு நாள் முழுவதும் மின் தடை ஏற்படுவதால், இரவில் புழுக்கம் காரணமாக மக்கள் தூங்க முடியாமல் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

அதன் நீட்சியாக, தண்டையார்பேட்டை, தண்டையார் நகர் மெயின் தெருவில் மின்தடை ஏற்பட்டதால் மக்கள் தூங்க முடியாமல் அவதிப்பட்டனர். வழக்கம் போல மின் வாரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டால், பதிலளிக்காமல் இருந்துள்ளனர். இதனால், நேரடியாக மின் வாரிய அலுவலகம் சென்று முற்றுகை



போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேபோல், எண்ணூரில் கடந்த ஒரு வார காலமாக இரவு நேரத்தில் மின் தடை செய்யப்பட்டு வந்ததால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் எண்ணூர் விரைவு சாலையில் அமர்ந்து வாகனத்தை மறித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் எண்ணூரில் இருந்து திருவொற்றியூர், காசிமேடு உள்ளிட்ட பகுதிக்கு செல்ல வேண்டிய வாகனங்கள் செல்ல முடியாமல் வரிசையில் நின்றன.

அதேபோல், அம்பத்தூர் பகுதி, பாடி மண்ணூர் பேட்டை கொரட்டூர், பட்டரவாக்கம், மாதனாங் குப்பம், கள்ளிக்குப்பம் காந்திநகர் புதூர், அம்பத்தூர் ஓ.டி. பஸ் நிலையம், அத்திப்பட்டு போன்ற பகுதிகளில் கடந்த ஒரு வார மாக அறிவிக்கப்படாத மின்வெட்டு இருந்து வருகிறது.

குறிப்பாக இரவு 10 மணிக்கு ஏற்படும் மின் வெட்டு நள்ளிரவு ஒரு மணி வரை நீடிக்கிறது. பின்னர் மீண்டும் அதிகாலை 4 மணிக்கு ஒரு மணி நேரம் மின் தடை ஏற்பட்டு 5 மணிக்கு மின் சாரம் வருகிறது. இதே போன்று பகல் நேரங்களிலும் ஒரு மணி நேரம் மின் தடை ஏற்படுகிறது.

இதனால், கோடை கால புழுக்கத்தில் மக்கள் தவித்து வருகின்றனர்.

**அலட்சியமான பதில்!**

பொதுமக்கள் கூறுகையில், “கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து மின் தடை ஏற்படுகிறது. இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளிடம் கேட்டால் ஒரே வார்த்தையில் ஓவர் லோடு என்று கூறுகிறார்கள். உயர் அழுத்த மின்சார வயர் அறுந்து விழுந்த பிரச்சினையில் நேற்று முன்தினம் கள்ளிக்குப்பம் கங்கை நகரில் வீடுகளில் உள்ள ஏ.சி., பிரிட்ஜ், டி.வி. ஆகியவை வெடித்து சிதறியது. கடந்த ஒரு வார மாக பகலில் வெயிலின் புழுக்கத்தில் அவதிப்படும் நாங்கள் இரவு நேரத்தில் தூக்கத்தை தொலைத்து அவஸ்தைபடுகிறோம்” என்றனர்.

இராயபுரம், கொடிமரத் தெரு, பென்டன் தெரு, ஏ.ஜே., காலனி ஆகிய தெருக்களில், 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில், (23.5.2026) அன்று இரவு 10:00 மணிக்கு மின்தடை ஏற்பட்டது.

மின் தடை குறித்து, அப்பகுதி மக்கள், இராயபுரம் பனைமரத் தொட்டியில் உள்ள மின்சார அலுவலகத்தை மொபைல் போனிலும், தொலைபேசிலும் மாறி மாறி தொடர்பு கொண்டபோதும், அலுவலர்கள் அழைப்புகளை ஏற்கவில்லை.

இதனால் பெண்கள், தங்களது குழந்தைகளுடன், தெருக்களில் படுத்து உறங்கும் நிலை ஏற்பட்டது. தொடர் மின் தடையால், தண்ணீர் இல்லாமல் கழிப்பறைக்கு செல்ல முடியாமல், பெண்கள் அவதியடைந்தனர்.

கடந்த ஒரு வாரமாக அதிகரித்து வரும் கோடை வெப்பத்தால் ‘பீடர்’ எனும் மின்னூட்டியில் கோளாறு ஏற்பட்டு பல இடங்களில் மின்வெட்டு ஏற்படுகிறது. குறிப்பாக இரவு 10:00 மணிக்கு மேல் ஏற்படும் திடீர் மின் வெட்டால், பொதுமக்கள் மட்டுமின்றி மின்வெட்டினால் மருத்துவமனைகளில் நோயாளிகள் அவதிக்குள்ளாகி யுள்ளனர்.

மின்துறை அமைச்சரோ மின் வெட்டினை துரிதமாக சீர் செய்ய நடவடிக்கை எடுக்காமல் ஆள் பற்றாக்குறை, மின் சாதனங்கள் பழுது என்று அலட்சியமாக பதிலளிக்கிறார்.

### சென்னை – அண்ணா சாலையில்

## கழக ஆட்சி தொடங்கிய மேம்பாலப் பணிகள் 68 சதவிகிதம் நிறைவு!

### தடைகளைத் தாண்டி சாதனை!

சென்னை, மே 26–

சென்னையின் போக்குவ ரத்து நெரிசலைக் குறைக்கும் முக்கியத் திட்டமான சைதாப்பேட்டை - தேனாம்பேட்டை மேம்பாலப் பணிகள் சவால்களுக்கு மத்தியிலும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

தொழிலாளர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் ஏற்பட்ட தாமதங்களைத்தாண்டி, இத்திட்டம் தற்போது 68 சதவீதப் பணிகளை எட்டியுள்ளது.

சென்னை அண்ணா சாலையில் சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை 3.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் மேம்பாலப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை நெருங்கி வருகின்றன. நெடுஞ்சாலைத் துறை வெளியிட்டுள்ள தகவலின்படி, இத்திட்டத்தின் சுமார் 68 சதவீத பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

குறிப்பாக தூண்களுக்கான அஸ்திவாரப் பணிகள் 98 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளன. 1.1 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் திட்டமிடப்பட்டுள்ள 131 தளங்களில் 32 தளங்கள் ஏற்கனவே பொருத்தப்பட்டு விட்டன. மேலும் 8 தளங்களை இந்தமாத இறுதிக்குள் பொருத்த அதிகாரிகள் இலக்கு நிர்ணயித்துள்ளனர்.

மேற்கு ஆசியப் போர் காரணமாக ஏற்பட்ட எரிபொருள் விலை உயர்வு மற்றும் தேர்தல் சமயத்தில் தொழிலாளர்கள் வாக்களிக்கத் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றதால் ஏற்பட்ட ஆள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் இப்பணிகளில் சற்று சுணக்கம் ஏற்பட்டது. தற்போது தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளதால், திட்டமிட்டபடி வரும் செப்டம்பர் மாதத்திற்குள் பாலத்தை முழுமையாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்குத் தேவையான கட்டுமானப் பொருட்கள் மகாராஷ்டிரா, கோவா மற்றும் ஐதராபாத் ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றன. இந்த மேம்பாலத் திட்டத்தின் மிக முக்கிய சிறப்பம்சம் என்னவென்றால் ரயில் சுரங்கப் பாதைகளுக்கு மேல் கட்டப்படும் இந்தியாவின் அரிய மேம்பாலத் திட்டங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

மெட்ரோ சுரங்கப்பாதை அமைந்துள்ள பகுதிகளில் அமைக்கப்படவேண்டிய 32 தளங்களில் 13 தளங்கள் ஏற்கனவே வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன. இதற்கிடையில், சைதாப் பேட்டைப் பகுதியில் அணுகு சாலை மற்றும் பாதுகாப்புத் தடுப்புகள்அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்தப் பணிகள் நடைபெறும் பகுதிகளில், குறிப்பாக பேருந்து நிறுத்தங்கள் உள்ள இடங்களில் பயணிகளுக்குத் தற்காலிக நிழற்குடைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், கட்டுமானப் பகுதிகளில் இருந்து தண்ணீர் கீழே சிந்துவதைத் தடுக்கத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அற்புதம் அல்ல ; அற்பத்தனம், அசிங்கம்!

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் சிறப்பானவை. செறிவானவை. அதில் மிகமிக முக்கியமான தீர்மானம், முதுகில் குத்திய காங்கிரஸ் கட்சியைப் பற்றியது ஆகும்.

தி.மு.க. ஆட்சி அமைக்க விரும்பிய மக்களின் வாக்குகளால் வெற்றியைப் பெற்று, அதனையே பணயமாக வைத்து இரண்டு அமைச்சர் பதவிகளை பல்லிளித்து வாங்கி இருக்கிறது காங்கிரஸ் கட்சி. ‘சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாமல் நம்பியவர்களுக்கு எல்லாம் துரோகம் இழைக்கும் அறமில்லாத காங்கிரஸ் கட்சிக்கு கண்டனம்’ என்பதை தீர்மானமாக நிறைவேற்றி இருக்கிறார் இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு உதயநிதி அவர்கள். இதில் உள்ள ஒவ்வொரு சொல்லும் திமுக தொண்டர்களின் உணர்வு மட்டுமல்ல, அரசியல் மனசாட்சி உள்ள அத்தனை தமிழ் மக்களின் உணர்வு ஆகும்.

தி.மு.க. கூட்டணி தயவால் வெற்றி பெற்று, இன்றைக்கு அமைச்சர் ஆகி இருக்கிற ராஜேஷ்குமாருக்கு இந்தத் தீர்மானத்தைப் படித்தால் கோபம் வருகிறது. ‘நீண்ட காலமாக தி.மு.க. கூட்டணியில் புழுக்கத்தோடு இருந்ததாம் காங்கிரஸ்’. புழுக்கத்தோடு எதற்காக இருக்க வேண்டும்? போய் தொலைந்திருக்க வேண்டியதுதானே? ‘போய் கெடுக்க முடியாது என்பதால், இருந்து கெடுக்க நினைத்ததா’ காங்கிரஸ் தலைமை? அதுதானே உண்மை!

**திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைக் கொச்சைப்படுத்தும் செயலை எதிர்க்கட்சிகள் செய்யவில்லை. கூட்டணியில் இருந்து கொண்டே காங்கிரஸ் கட்சிதான் செய்தது. ‘புரியாத’ ராகுலுக்கு ‘தெரியாத’ அட்வைஸர் என்று சொல்லித் திரிந்த ஒருவர் புள்ளிவிவரப் புளுகுகளை எடுத்துவிட்டு, ‘கூட்டணிக்கட்சியே உங்களது சாதனைகளை ஏற்றுக் கொள்ளவில்லை’ என்று மீடியாக்களிலும் சேனல்களிலும் செய்தியை வரவைத்த கீழ்த்தரமான செயலை காங்கிரஸ் தானே செய்தது? அதனை ராகுல் அடக்கினாரா?**

குட்டியை விட்டு ஆழம் பார்ப்பது போல பலரையும் இறக்கிவிட்டது யார்? காங்கிரஸ் தலைமை தயவு இல்லாமல் வேறு யார் இதைச் செய்ய முடியும்?

தி.மு.க.வுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டே விஜய்யைப் பார்க்க காங்கிரஸ் தலைவர்கள் கள்ளத்தனமான சந்திப்புகளை நடத்தியதும், அதை அவர்களே மீடியாக்களுக்குப் பரப்பியதும் கூட்டணி தர்மமா?

**— ப.திருமாவேலன்**

இவை அனைத்துக்கும் மேலாக புதுச்சேரியில் ஒரு கேவலம் நடந்தது. தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர்களுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி போட்டி வேட்பாளர்களை நிறுத்தியது. தி.மு.க. போட்டியிட்ட தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டி வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். திருபுவனை, மங்களம், காலாப்பட்டு, ராஜ்பவன், உழவர் கரை, காரைக்கால் ஆகிய தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளரை எதிர்த்து காங்கிரஸ் கட்சியே போட்டியிட்டது. இத்தகைய போட்டி வேட்பாளர்கள், ராகுலைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

தமிழ்நாட்டு மக்கள். இப்போது இரண்டு பேர் அமைச்சர்கள் ஆகி இருப்பதை ‘60 ஆண்டுகளில் தமிழக அரசியலில் நிகழாத அற்புதம்’ என்று சொல்லி இருக்கிறார் ராஜேஷ்குமார்.



புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி போட்டி வேட்பாளர்கள் ராகுல்காந்தியைச் சந்தித்து வாழ்த்து பெற்ற காட்சி!

**இப்படி ஒரு நம்பிக்கைத் துரோகியைத் தான் சகித்துக் கொண்டு தி.மு.க. கூட்டணியில் வைத்திருந்தார்கள்.**

கூட இருந்து குழிபறித்தல், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தல், கூட இருந்தே பொறாமையால் பொசுங்குதல் - இவை எல்லாம் காங்கிரஸின் தேசியக் குணம் என்பதை தமிழ்நாடு அறியும். அதனால் தான் 60 ஆண்டுகளாக ஆட்சி நாற்காலிக்கு அருகில் அந்தக் கட்சியை வரவிடாமல் வைத்துள்ளார்கள்

**த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்து மக்களைச் சந்தித்து, அதன் ஆட்சியில் 35 பேரில் இரண்டு பேரை அமைச்சர் ஆக்கி இருந்தால் அற்புதம் எனலாம். தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்து, தி.மு.க. ஆட்சி அமைக்க வாக்களித்த மக்களால் எம்.எல்.ஏ. ஆகி - இன்னும் சொன்னால் விஜய் ஆட்சி வரக்கூடாது என்பதற்காக வாக்களித்த மக்களால் எம்.எல்.ஏ. ஆகி - அதை அடமானம் வைத்து இரண்டு சேர் வாங்கியது அற்புதம் அல்ல, அற்பத்தனம். அசிங்கம்.**

அறுபது ஆண்டுகள் கழித்து காங்கிரஸ் அமைச்சர் பதவி ஏற்கிறார்களாம். இதைப் பார்த்து நாடே சிரிக்கிறது. தனித்துப் போட்டியிட்டு ஆட்சி அமைக்கிறதா காங்கிரஸ்? இல்லை. அப்படி அமைத்திருந்தால் ‘சத்தியமூர்த்தி பவன்’ முன்னால் பட்டாசு போடலாம்.

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி அமைப்பதும், காமராஜர் படம் மாட்டியவர் ஆட்சியில் சேர் பிடிப்பதும் ஒன்றல்ல என்பதை திருமலைப்பிள்ளை வீட்டு வாசலில் போய்தான் கூவ வேண்டும்!

மற்றபடி, இப்போது மனநிறைவோடு இருக்கிறது தி.மு.க!

‘மிசா’ காலக்கட்டத்தில் கழகம் பெரும் துன்பத்தை அனுபவித்தது. திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தளகர்த்தர்கள் சிறைக்கொட்டடியில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஒவ்வொரு குடும்பத்தினரையும் சந்தித்து ஊர் ஊராகப் போய் ஆறுதல் சொன்னார் தமிழினத் தலைவர் கலைஞர். பல்வேறு ஊர்களில் இருந்து தொண்டர்களும் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் கோபாலபுரம் வந்து தலைவருக்கு ஆறுதலைச் சொன்னார்கள்.

அப்போது தனிக்கட்சி தொடங்கி இருந்த எம்.ஜி.ஆர்., “கருணாநிதி இப்போது அனுபவிப்பதுதான் உண்மையான நரகம்” என்று சொன்னார். அதற்கு தனக்கே உரிய பாணியில் பதில் அளித்தார் தலைவர். “எனது ‘நரக’ வேதனை 1972 அக்டோபர் மாதத்தோடு முடிந்துவிட்டது” என்றார் தலைவர்.

**தி.மு.க.வுக்கும் இவர்கள் இருந்ததால் தொடர்ந்த நரக வேதனை முடிந்துவிட்டது!**